[பேரவைத் தலைவர்] [2020 பிப்ரவரி 20

மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

கலையரங்கம்

***56305—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கலையரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இன்று சமூக நீதி தினம். சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் அரசை நடத்திக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இருக்கும் இந்த அவையில், இதே இடத்தில் அம்மா அவர்கள் பேசுகின்றபோது, 'எனக்குப் பிறகு நூறாண்டுக் காலம் இந்த ஆட்சி நிலைக்கும்' என்று சொன்னார்கள்.

2020 பிப்ரவரி 20]

மூன்றாண்டுக்காலம் முடிந்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்கிற, சாதனை சரித்திரம் படைக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலைமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு வாழ்த்துகளையும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈரோடு சட்டமன்றத் தொகுதி, அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மேடையுடன்கூடிய திறந்தவெளி கலையரங்கம் கட்டிக் கொடுக்கப்படுமா என்ற கேள்வி இங்கு கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்று கூறி வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

இதய தெய்வம் அம்மாவின் அருளாசியோடு, மூன்றாண்டுகள் நிறைவுசெய்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும், நெருப்பாற்றில் நீந்தி, தமிழகத்தில் எந்த முதல்வருக்கும் இல்லாத சோதனைகளைச் சந்தித்து, சாதனையாக்கிய சரித்திர நாயகன்; குடிமராமத்து நாயகன்; நல்லாட்சி நாயகன்; மழைராசி நாயகன்; மாங்கனி மாவட்டம் தந்த மைந்தன்; மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் தென்பாண்டிச் சிங்கம், அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். 100 கோடி ரூபாய் திட்டத்தில் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு புதைவட கம்பி வழித்தடம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். 100 நகராட்சிகள், இந்தியாவில் smart city–*யாக தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும், ஈரோடு மாநகராட்சியை முதல் மாநகராட்சியாக மாற்றி மத்திய அரசின் விருதினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறையில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்க தன்னை அர்ப்பணித்து, அல்லும் பகலும் அயராது*

உழைத்து வரும் சாதனைச்செம்மல், எனது அரசியல் வழிகாட்டி மாண்புமிகு அண்ணன் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் உரிமை காத்த தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மண்ணில், ஈரோடு கிழக்குத் தொகுதி, பன்னீர்செல்வம் பார்க் அருகில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கலையரங்கம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பள்ளியில் கலையரங்கம் அமைக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கழிப்பிட வசதிகள், சுற்றுச் சுவர் கட்டுவது போன்ற பணிகளைத்தான் இதுவரை செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மேலும், பெண்கள் அதிகமாக இருக்கின்ற பல இடங்களிலே கலையரங்கங்கள் தேவைப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அதை மனதில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச்செல்வேன் என்பதை இந்த நேரத்தில் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலையரங்கம் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 20]

அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு நிதியை வழங்கிக் கொண்டிருந்தோம். தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, நூலகக் கட்டடம் கட்டுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கி கட்டடம் கட்டிக் கொண்டிருந்தோம். அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள் மற்றும் நூலகங்களுக்கான கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டுவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை சென்ற ஆண்டே இந்த அவையில் எடுத்து வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேச உள்ளோம். இங்கே இருக்கின்ற நம்முடைய அரசு நிதி உதவி பெறுகின்ற பள்ளிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான உதவிகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை மனதிலேகொண்டு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். நான் படித்த பள்ளிக்கூடமான கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குண்டரப்பள்ளி பள்ளிக்கூடம் உயர்நிலைப் பள்ளியாக உள்ளது. 1971 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அந்தப் பள்ளிக்கூடம் இன்று வரை மேல்நிலைப் பள்ளியாகத் தரம்*

உயர்த்தப்படவில்லை. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல, கட்டட வசதியும் உள்ளது. ஆகவே, இந்தப் பள்ளிக்கூடத்தை உடனடியாக இந்தக் கல்வி ஆண்டிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் நம்முடைய அரசின் கவனத்திலே இருக்கின்றன. தொலைதூரங்களிலிருந்து மாணவர்கள் படிக்க வருகிறார்கள் என்பதால், சில பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும், மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது என்பதால் பல பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் கோரிக்கைகள் உறுப்பினர்களால் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தையும் பரிசீலனை செய்து, வருகின்ற நிதியாண்டில், இந்த ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு முதலமைச்சருடைய ஒப்புதலோடு இதனை நிறைவேற்றித் தருவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமர் அவர்கள் தோகைமலையிலே இருக்கின்ற பள்ளியில் தலைமையாசிரியர் இல்லை என்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்தப் பள்ளிக்கு இன்றையதினம் தலைமையாசிரியர் பணியிலே ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைக்குழி மேல்நிலைப் பள்ளி மிகவும் பழமை வாய்ந்த பள்ளிக்கூடம். சுமார் ஆயிரம் மாணவர்களுக்குமேல் அங்கே

2020 பிப்ரவரி 20]

கல்வி பயின்று வருகிறார்கள். அங்கே சுற்றுச் சுவர் சரியாக இல்லாததால் பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. ஆபத்தான நிலையில் இருக்கிறது. மேலும், ஏழு புதிய வகுப்பறைகள் மற்றும் கலையரங்கங்கள்கூட அந்தப் பள்ளிக்கூடத்திற்குத் தேவையாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஏழு வகுப்பறைகள் தேவை என்று குறிப்பிட்டார்கள். சுற்றுச் சுவர் தேவை என்றும் குறிப்பிட்டார்கள். எல்லாப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் முக்கியமாகத் தேவை என்பதை நாங்கள் அறிவோம். ஏனென்று சொன்னால், சுற்றுச் சுவர் இல்லையென்றால், அங்கே பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்ற நிலையை மனதில் கொண்டு அதைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிலைகளை மனதில்கொண்டுதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் எங்கெங்கே சுற்றுச் சுவர் தேவையோ அங்கே நபார்டு திட்டத்தின் மூலமாகக் கட்டுவதற்கும், அதேநேரத்தில், கூடுதலாக மாணவர்கள் இருக்கின்ற பள்ளிகளில் வகுப்பறைகளைக் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பள்ளிக்கு கட்டடம் கட்ட இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே எடுத்துக்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுற்றுச் சுவர் அமைப்பதற்காக நம்முடைய பள்ளிக் கல்வித் துறைக்கு குறிப்பிட்ட அளவிற்கு நிதிகளை வழங்கி இருக்கிறார்கள். அதையும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.